# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௫]  யாழ்ப்பாணம்:-  நந்தன வருஷ வைகாசி மீ ௧௭ உ வெள்ளிக்கிழமை (30 May 1952)  [இல - ௭௭]


## ஏட்டுப் படிப்புடன் நாட்டு வழப்பமும் வேண்டும்

### பெண்ணொலி பெரிதாய் முழங்கட்டும்

கல்வித் துறையில் சமத்துவம் அவசியம். ஆண்—பெண் சமத்துவத்தையே குறிப்பிடுகிறேன். ஆணைப்போல நெடுங்காலம் பெண்ணும் கல்வி கற்க முடியாது. தேவையுமில்லை. ஆனால், ஆண்கள் கற்பதிலே முககால் திட்டமாவது பெண்களும் கற்கவேண்டாமா?

ஆணும் பெண்ணும் சமத்துவ ரீதியில் கல்வி கற்பதனால் நன்மைபல உண்டு. சமுதாய அளவில்பார்த்தால் அந்நன்மை பெருகும்.

ஆணும் பெண்ணும் இணைவதுதான் வாழ்க்கை. அந்த இணைப்பு சுமூகமாக வளர்ச்சியுறவேண்டும். சமூக வளர்ச்சிக்குப் பரஸ்பர சமக்கல்வி பெருந்துணை. மனப்பான்மையில் விட்டுக் கொடுக்குந் தன்மையும், ஒருவர் சொல்வதை மற்றவர் புரிந்துகொள்ளுந்தன்மையும் கைவரப் பண்ணுவது கல்வியே.

பெண் கல்விக்கு வயசுக்கிரம எல்லை கட்டுவது நல்லதுதான். இருந்தாலும் எல்லை சுருங்கிக் கிடப்பது கெட்டது. சிறு வயதிலேயே மேல் படிப்பை நிறுத்திவிடும் வழக்கத்தைப் பெற்றோர் ஒழிக்கவேண்டும்.

பிஞ்சு நெஞ்சில் எதுவும் அழுந்திப் பதியும். பள்ளிக்கூடந்தான் சிறுவர்க்கு உலகம். அங்கே குண விசித்திரங்களையும் பேச்சுக்களையும் காண, கேட்க முடிகிறது. நாள்முழுதும் அங்கே பழகுவதனால், குழந்தைகளுக்குக் கூட்டுறவு பழக்கம் ஏற்படுகிறது. புத்தகப் படிப்பு மட்டுமின்றிச் சமுதாயத்தில் பழகும் தோரணையையும் பள்ளிக்கூடங்கள் கற்பிக்கின்றன.

ஆதலால், வயது வர, வர, வெளியுலகத்தொடர்பும் ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிகரிக்கவேண்டும். இளம்பெண்ணைக் கூண்டுக் கிளியாக வளர்த்தோமானால் நாலு பேரிடம் பழகும் வழி முறைகள் தெரியாமல் தொட்டாற் சுருங்கியாகவே இருக்க நேரிடும். அதனால் பல மனக்கஷ்டங்கள் விளையலாம்.

ஆகையினாலே வசதி இருக்கிறவரை பெண்களைத் தவறுமல் பள்ளிக்கனுப்பி, ஏட்டுக் கல்வியும் நாட்டுக் கல்வியும் சம அளவில் அளித்து, உருப்படியான பெண்ணாக வாழுவழி செய்யவேண்டும்.

முக்கியமாக தொழிலாளர் தம் குழந்தைகளைச் சிரமப்பட்டாவது கல்வியறிவூட்டி நிச்சய மனிதர்களாக்கவேண்டும். தொழிலின் உயர்வு, உழைப்பின் தன்மை சோம்பலின் தீமை முதலான விஷயங்களை விளக்கும் நல்ல பாடங்களைப் புத்தக மூலமும், நேரடிக் காட்சிமூலமும் அறிந்திருந்தால், வாழ்வில் எதிர்ப்படும் மல்லாட்டங்களைப் பெரும்பாலும் சமாளித்து முன்னேறலாம்.

(சோலை — ராதா)

## தேர்தலுக்காகும் திருக்குறள் 9.

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்(து)
ஆவது போலக் கெடும்.

**தேர்தற் புத்துரை:**

பொய்ப் பிரசாரத்தினற் கட்சிப் பலத்தைக் கூட்டுவோம் என்று எண்ணினும் தேர்தல்நாள் அன்று அந்தப் பலம் இல்லாது போவதால் உண்மை விளங்கும்.

திருத்தொண்டர் திருநாள்

## ஈசனுக்கு அன்பர் எம்மை ஆள்பவர்

### வன்றொண்டரின் நற்றொண்டர்

சோழமண்டலத்திலே, திருவம்பரிலே, பிராமண குலத்திலுதித்த சோமாசிமாறநாயனார் என்பவர் தம்மிடத்துக்குச் சிவனடியார் வந்தால் அவர்களுடைய திருவடிகளை வணங்கித் திருவமுது செய்விக்கும் பண்புடையராய்வாழ்ந்தார் யாகங்களை முறைபிறழாது செய்யும் வழக்கமுடையவர்.

சிவனடியார் என்றால் எத்தன்மையராயினும் அவர் எம்மை ஆள்பவர் என்னும் மெய்யுணர்ச்சியையுடையவர், நித்திய நியமமாகத் திருவைந்தெழுத்தை ஓதித்துதிக்கும் வழக்கமுடையவராயிருந்தார்.

எத்தன்மைய ராயினும்
"ஈசனுக் கன்பர்" என்றால்
"அத்தன்மையர் தாம்நமை
யாள்பவர்" என்றுசொல்வார்
"சித்தந்தெளி யச்சிவன் அஞ்செ
ழுத் தோதும் வாய்மை
நித்த நியமம் எனப்போற்றும்
நெறியில் நின்றார்.

அவர் திருவாரூருக்குச் சென்று சுந்தரமூர்த்திசுவாமிகளை யடைந்து அவருடைய திருவடிகளை வணங்கி அதன் பெறுபேறாகச் சிவலோகத்தை யடைந்து பேரின்ப வாழ்வைப் பெற்றார்.

சீருந்திரு வம்பொழி யுந்
திரு வாரூர் எய்தி

## ஆசிரியர் அலை

### 3-ம் பக்கம் பார்க்கவும்

ஆரூர்செழு மாமறையின் அணுக்கன்
றொண்டர்க் கன்பால
சாரும்பெரு நண்பு சிறப்ப
அடைந்து தங்கிப்
பாரும்விசும் பும்பணி யும்பதம்
பற்றி யுள்ளார்.

தன்றாப்புலன் ஐந்துடன் ஆறு
தொகுத்த குற்றம்
வென்(று) "நீங்கிது நன்னெறி
சேரும் விளக்கம்" என்றே
வன்றொண்டர் பாதந் தொழு
தாவ சிறப்பு வாய்ப்ப
என்றுங்கில வுஞ்சிவ லோ த்தில்
இன்பம் உற்றார்.

சிவகூடியாரைச் சிவனெனவே கண்டு வழிபடுதலும் பலவாசனை தொடரா வண்ணம் திருவைந்தெழுத்தோதுதலும் சிவஞான போதத்திற் கூறியவாறு இவருடைய வாழ்க்கையிலமைந்திருத்தல் காணக்கிடக்கின்றன.

உ

## தேவரறியாத தேவே போற்றி .............


திருச்சிற்றம்பலம்

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

## தமிழ் மகாநாட்டுத் தலைவரின் மகத்தான வெற்றி

### மந்திரி பொன்னம்பலத்துக்கு 4409 கூடுதல் வாக்கு



## இந்தியருக்கு இலங்கையர் ஆற்றவேண்டிய கடமை

### அன்பு நெறியால் ஆவன செய்தல் நன்று

உலகின்கண் வாழும் மக்கள் பல திறப்பட்ட வாழ்க்கை முறைகளையுடையரா யிருக்கின்றனர் வாழ்க்கை முறையையே நாகரீகம் என்னும் சொல் குறிக்கும். ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் நாகரிகத்தையே சிறந்ததாகக் கூறிவந்தனர், அவ்வாறு கூறும்பொழுது, எது உயர்ந்தது எது குறைந்தது என்று அறிதல் எளிதாயிருக்கவில்லை. மஹெஞ்சோதாரோவில் கண்ட புதைபொருள், பண்டைத் தமிழ் மக்களுடைய மனம் எதைப்பற்றியிருந்ததென்பதை இனிது காட்டியது. இவ்வுலக வாழ்க்கையின் எல்லை இறைவன் திருவடி யடைதலே என்பது தமிழ்ப் பெரியோருடைய காட்சியில் தெளிவாகக் காணக்கிடந்தது. இஃதே தமிழ் மக்கள் வாழ்க்கையின் இலக்காயிருக்கின்றது.

இந்த இலக்கை யடைவதற்கு உதவியாயிருப்பது எதுவோ அது நல்லதாகச் சொல்லப்படும், எது இடையூறு யிருக்கின்றதோ அது தீயதாகச் தள்ளப்படும். நல்லனவும் தீயனவும் பலப்பல எடுத்துக்காட்டலாம், இங்கே காந்தி அடிகள் நல்லனவெனக் காட்டிய இரண்டு உறுப்புகளில் ஒன்றைமாத்திரம் எடுத்துக்காட்டுவோம். அது அன்பு அல்லது அஹிம்சை, என்பதாகும். இதை, காட்சியைத்தரும் கண்ணே யென்னுமாறு அவர் வாழ்க்கையிலெடுத்து வாழ்ந்து காட்டினார்.

இப் பொருள்பற்றிப் பத்திரிகைகளில் எழுதும்போதும் மேடைகளிலே பேசும்போதும் மாசடைமனத்தரேயெனினும் அன்பே உருவமயினர்போன்று "அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்" "அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்," 'உன்னைப்போல உன் அயலவனை நேசிப்பாயாக' என்று இவ்வாறெல்லாம் உயிரில்லா ஊன்போன்ற சொற்களையெல்லாம் வாரிப்பொழிந்துவிட்டு ஒப்பிலா அறிஞராய் உலகுக்கு வழிகாட்டிகளாய் நின்புற்று இறுமாந்து நிற்பர் எங்கள் பெரியோர். பூனை இராசாவாயிருத்தல் எலிவந்தவிடத்திற்காணலாமென்றபடி தாம் விரும்பிய பொருள் தமக்குரூன் வந்தவிடத்தில் அதைப் பெறுதற்கு எவ்வாறு முயலுகிறார்கள், முயலும்பொழுது தாம் வாரி வழங்கிய சொல் மாரிகளைத் தாம் எவ்வாறு எடுத்தாளுகிறார்கள் என்பது எந்த அறிவிற் குறைந்தவரும் இலகுவாக அறிய வருகின்றது.

### ஆராய்ந்து பார்க்க

இலங்கை இந்திய மக்களுடைய வாக்குரிமையைப்பற்றிப் பேசும்பொழுது இப்போலிப் பெரியோருடைய உள்ளக்கிடக்கை உள்ளவாறு அறியவருகின்றது. இலங்கை இந்தியர்களை இங்குள்ளோர் அக்காலத்தில் வரவழைத்தார்களா அல்லவா? அழைத்தபொழுது பலவசதி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ வைகாசி ௴ கஉ வெள்ளிக்கிழமை

## "ஒழிக, வீழ்க" ஒப்பாரி.

தமிழ் இலக்கியத்திலே பெரிதும் மதிப்புக்குரிய பதம் 'வாழ்க' என்பதும், மிகவும் விலக்கப்படும் சொல் 'ஒழிக' என்பதும் தமிழ் மரபுணர்ந்தார் அறிவர். ஆனுற் புறநாட்டு மறக் கொள்கையாம் பொதுவுடைமை வித்து எப்பொழுது இந்நாட்டில் விதைக்கப்பட்டதோ அப்பொழுதே மங்கல வாழ்த்துப் போய் அமங்கலமான துர் எண்ணம் எழலாயிற்று.

அரசியலில் அமங்கலம் அநேகமாக இருக்கவே வேண்டும் என்று கருதுகின்றவர்களுக்கு இந்நிலைமை வியப்பைக் கொடாதிருக்கலாம். ஆனுல் அரசியல் ஒழுக்கம் அறிந்தார் எவரும் இந்தவிதமான கெடுமதிப் பேச்சை அங்கீகரிக்க மாட்டார்கள். இப்பொழுது நடைபெற்று வரும் தேர்தலிலே வெளியாகிய பிரசுரங்களிலும் சுவர்களிலே பொறிக்கப்பெற்ற சுலோகங்களிலும், மேடைப் பேச்சுக்களிலும் எல்லாக் கட்சியினரும் தங்கள் கட்சியை வாழ்த்திப் போற்றுவதை விட்டு மற்றைய கட்சிகளைத் தூற்றி வசை பொழிந்து வருவது தமிழகத்திற்கோர் அபசகுனம் என்றே சொல்ல வேண்டும்.

பொதுவுடைமை அல்லது தமிழரசு அல்லது ஐக்கிய தேசியக் கட்சி அல்லது தமிழர் மகாநாடு ஒழிக என்றாலும் ஓரளவில் ஒரு குழுவைக் குறிக்கின்றதே என்று அந்த அமங்கலப் பேச்சை அறிஞர் பாராட்ட மாட்டார்கள்! ஒருவரைக் குறித்து அவருடைய நாமத்தை உரைத்து 'ஒழிக; வீழ்க' என்று உண்ணுக்கு உடையும்வரை உரத்துக் கூக்குரல் செய்வதைக் கேட்குஞ் செவிகள் என்ன பாவஞ் செய்தனவோ, மாற்றானைப் போற்றி கோரகப் போராடும் மரபினிற் பிறந்த ஈழ மக்கள் தூற்றுவதிலும் துன்மொழியும் வன்சொல்லும் வழங்குவதிலும் அகமகிழ்ச்சி அடைவார்களேயானுல் இன்ப உருவாகிய தமிழன்னை என் புருகாதோ?

இந்த 'ஒழிக, வாழ்க' கூக்குரல் செய்வோரிற் பெரும்பான்மையும் கல்வி பயிலும் சிறுரும், உயர்தரமாணவர்களும், வயது வந்தவர்களும் இருத்தல் எதிர்காலப் போக்கு எவ்வாறு அமையப் போகின்றதென்பதைக் காட்டுகின்றது. 'நமச்சிவாயவாழ்க; நாதன் றாழ் வாழ்க' என்று காலையிலே கலாசாலை ஆரம்பமாகும்பொழுது வாழ்த்தொலி பரப்பிக் கல்வி தொடங்குஞ் சைவப் பள்ளிக்கூடங்களிற் கற்குஞ் சிறுரே இந்த 'ஒழிக; வீழ்க' ஒப்பாரியில் ஒழுங்காய்ச் சேர்ந்து கொள்கின்றார் என்றால் மற்றைய மாணவர்களையும் வயது வந்தவர்களையும்பற்றி நாம் என் கூறுவது?

அதுமாத்திரமா? அபேட்சகர்கள் வீதியாற் செல்லும்போதெல்லாம் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அபசார வார்த்தை கூறி எளனஞ் செய்கின்றமையும், அநேகமாகக் கல்லூரி மாணவர்களிடையே காணப்படுகின்றது. இவ்வித அலங்கோல ஆரவாரங்களைக் கண்டும் காணுதார் போல ஆதரவாளர்களும் அபேட்சகர்களும் இருந்தால் இச்செயல் அங்கீகாரம் பெற்றதென்றே அதை அறியாது செய்யும் சிறுர்கள் நினைப்பார்கள். தேர்தல் ஐந்து வருடத்திற் கொருமுறை வந்துகொண்டிருந்தால் இருபத்தைந்து ஆண்டுகளிலே இந்நாட்டில் அமங்கலப் பேச்சே சர்வ சாதாரணமாய் விடுமன்றோ?

தமிழ் நாட்டிலே அரசியற் கட்சிகள் தமிழ்மரபையும் தமிழ்ப் பண்பாட்டையும் பாதுகாத்து வருவதற்கு வழி தேடுவதா? அல்லது தங்கள் போராட்டத்தைச் சீரான முறையில் நடத்தாது விடுவதனுல் அவற்றைச் சீர்கெடச்செய்வதா என்று எல்லாக் கட்சியினரையும் கேட்கின்றோம். அரசியல் வாதிகள் ஒழுக்க முறையாக நடந்தாலே அன்றி இந்நாட்டிற்கு வழிகாட்டிகள் என்று வாக்காளர்களின் அநுமதியைப் பெறச்செல்லும்போது அவர்களின் அநுதாபத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். இளைஞர்கள் பரபரப்பிலும் புதுவிதத்திலும் மனத்தைச் செலுத்துவது வழக்கமென்றாலும், மரபுக்காகாத இழி தொழிலைச் செய்யப் பெரியவர்கள் பார்த்துக் கொண்டு வாளா இருப்பது முறையாகுமா?

திருவிழா, களியாட்டம் போன்ற சில வைபவங்கள் சிறுர்களுக்குத் தீமை விளைவித்துவிடும் என்று எண்ணும் பெற்றோர்கள் தேர்தல் நிகழ்ச்சிகளால் உண்டாகும் அபாயகரமான துர்ப்பழக்கத்தை ஏன்கண்டிக்கின்றாரல்லர். தேர்தல் என்றால் கொக்கரித்துக் கூத்தாடி, வசைபாடி மனம் போனவாறு நடந்து வருவதா? அல்லது செம்மையான முறையிலே அரசியலை அறிந்து தக்கார் ஒருவரைத் தெரிவதா என்பதைப் பள்ளிக்கூடங்களிலே 'குடியியல்' என்னும் பாடம் விளங்க வைக்கும்போது அறிவுறுத்துதல் அவசியமாகின்றது. ஆசிரியர்களும் பெற்றோரும் சமூகசேவா சங்கங்களும் இப்பணியில் ஈடுபடுவது ஒரு தேசத்தொண்டாகும்.

---

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது. **எங்கள் சோதிடம்**

இவ்வாரப் பலன்கள் 1—6—52——7—6—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் எல்லா வசதிகளுமுண்டு. இனத்தவர்களும் நண்பர்களும் அதிகம் உதவிப்பண்ணுவார்கள். ஆலோசியாமல் தீர்மானிப்பதைத் தவிர்த்தால் வெற்றி நிச்சயம். வார இறுதியில் சில குடும்பத் தொந்தரவுகள் அல்லது பிள்ளைகளுக்குச் சுகவீனம் உண்டாகக் கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்த வாரம் சொந்தக் கருமங்களுக்கு எதிர்ப்பிருக்கும். ஆனுல் அவை வலியற்றவையாகும். சில கஷ்டங்களின் பின் வெல்லுவது நிச்சயம். வார இறுதிக்கு முன் தேகசுகம் திருந்தும் காணிகளால் இலாபம் வரும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

பணத்துறையில் நல்ல காலம். ஆனுல் சொந்தக் காரியத்தில் சில தொந்தரவுண்டாகும். நல்ல பேர் கேட்பது கஷ்டம் இரகசியப் பகைவரால் மனச் சலனத்துக்கும் தொந்தரவுக்குமிடமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் வண்டிகளால் அதிக செலவுண்டாகும். இனத்தவர் சண்டையிடுவார்கள் வெற்றி பெறுவதற்குக் கீழ்ப்படித்து கோபத்தை அடக்க வேண்டும். மனைவியின் இனத்தவர்களுடன் முயற்சித் தொடர்புகளைத் தவிர்க்கவும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

இந்த வாரம், தகப்பனுர்மூலம் அல்லது தகப்பனுருடைய இனத்தவர்மூலம் அதிக இலாபமுண்டாகும். வியாபாரப் பிரயாணத்துக்கு நல்ல காலம். புது முயற்சிகளில் எதிர்ப்பு நீங்கி வெற்றியுண்டாகும். வார இறுதியில் குடும்பக் குழப்பத்துக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் பணம்வரும். மிஞ்சுவது கஷ்டம். பெண்ணின நண்பரால் உதவியுண்டாகும். நகை அல்லது சில வியாபாரஞ் செய்தால் வார இறுதியில் காத்திராத இலாபமுண்டாகும்.

**துலாம்** சித்திரை 3, 4ம்பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

இந்த வாரம் எதிர்ப்பு நீங்கும். பிள்ளைகள்மூலம் குடும்ப சமாதானமும் இன்பமும் வரும். புது முயற்சிகள் நன்மையைத் தரும். ஆனுல் முற்பணம் விடவேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் குடும்பத்தொந்தரவுக்கிடமுண்டு. விவாகப் பகுதியாருடன் சிலபிழை விளக்கம் உண்டாய் மனத்தை நிலைகுலைக்கக்கூடும் சகோதர சகோதரிகளால் நன்மையுண்டு. ஆனுல் அவர்களுடைய எண்ணத்துக்கு இடங்கொடுக்க வேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

சிறு குடும்பத் தொந்தரவைத் தவிர இந்தவாரம், அதிக உதவியாயிருக்கும். தூர இடங்களிலிருந்து காத்திராத நல்ல புதினம் வரும். மாற்றம் அல்லது உயர்ச்சி எதிர்பார்த்திருந்தால நன்மையாய் முடியும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வியாபார முறையில், முதல் நாளைத்தவிர நல்ல காலம் சொந்த விஷயத்தில் தொந்தரவுக்கிடமுண்டு. நண்பர்கள் உதவிப்பண்ணுவார்கள். ஆனுல் அதிக சிரமப்பட்டுப் பதிலுபகாரஞ்செய்யவேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

இந்தவாரம் குடும்பக்குழப்பமும் ஆறுதலின்மையுமுண்டு. திங்கள், செவ்வாயும் புதன் காலையும் அதிகம் பிழையான காலம். புது முயற்சிகளைத் தவிர்க்கவும். வெற்றிபெற வேண்டுமானுல நண்பரை அதிகம் நம்பவேண்டாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

முதல் அரைவாரம் மாற்றங்களுக்கும் புதுப் பேச்சுக்களுக்கும் நல்ல காலம். புதன் பிற்பகலும் வியாழனும் வெள்ளி காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார இறுதி திரும்பவும் நன்று.

---

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### தேர்தல் விழாக் காலம் நீட்டப்படாதா?

சிறீமான் சகுனி என்றுங் காணுத இருண்ட முகத்துடன் இருந்தார். தேர்தல் விழா உச்சகதி அடையும்போது இத்தப் பிரமுகர் ஏன் இப்படி வறண்ட வதனத்துடன் பரிதபிக்கிறார் என்று நண்பர் பொது சனம் வியப்படைந்தார். கேட்டறிய முன்னரே தொடங்கினுர் சகுனி. ஐயா, பொது சனமே, ஊருக்கெல்லாம் நன்மை செய்கிறீர் என்கிறீரே. எனக்குமட்டும் ஒரு உதவி புரியக்கூடாதா என்று கண்ணீருங் கம்பலையுமாய் விம்மி விம்மிக் கேட்டார். என்ன அவ்வளவு பிரமாதம்? பொதுசனம் செய்யக்கூடியதைச் செய்வார் தானே என்றுர் நண்பர்.

இல்லை. தேர்தல்விழா ஆரம்பிக்கும்பொழுது தெரியவில்லை. ஒருமாதகாலம் எனக்கும் குருசந்திரயோகம். சேட்டதைப் பெற்றேன். ஊக்கமது ஊறிக்கொண்டிருந்தது. நேற்றிரவு கண்விழித்து எவ்வளவு அறிவில் இருந்தபொழுது என்மனைவி என்னைக் கேட்டா "30-ம் திகதியுடன் முடிவாகிறதாமே. அதற்குப் பின் எங்கள்பாடு என்ன. உம்மை ஆர் தேடப்போகிறுர். ஊக்கமது ஊறுதே, தாலிக் கொடியைக் கொண்டுவா என்று சொல்லப் போகிறீரே. விற்று ஊக்கமது கொள்ள" எனக்கொன்றுமாய்த் தெரியவில்லை. இதுவரை நான் இருபகுதியாரையும் முடிந்துவிட்டுக் கூத்துப் பார்த்தேன். நல்ல நடப்பு இருந்தது. 30-ந் திகதி இரவோடு எல்லாம் முடிந்துவிடுமே. இந்தத் தேர்தலைச் சிறிது பின்போடக் கூடாதா என்றுர்.

பொதுசனம் வியப்படைந்து 'இது முடியக்கூடிய காரியமா' என்றுர். ஏன் அப்படிச் சொல்லுகிறீர். இந்தக் கொழும்புக் களியாட்டம் பின்போடப்படவில்லையா, யாழ்ப்பாணத்தில் நடந்த களியாட்டங்கள் எப்பொழுதும் இரண்டு மூன்று கிழமைக்குப் பின்போடுவது வழக்கந்தானே என்றுர். சகுனியின் பரிதாப நிலையைக் கண்ட பொதுசனம் 'சரி, ஒருவிதஞ் செய்யலாம். இப்பொழுது உம்மிடம் வருவார்கள். நீர் எங்கேயாவது ஒழித்துக் கொண்டிரும். உம்மைத் தேடுவார்கள். நீரில்லாமல் இத்தக் கூத்தை ஆடிமுடிக்க முடியாது. இப்படிக் காலத்தை நீடித்துவிட்டால் பின்னர் ஒரு திகதிக்குத் தேர்தலை அவர்கள் ஒத்தி வைப்பார்கள்' என்று விகடமாகப் பேசி முடித்தார்.

---

### பெனுரிசில் ஓர் ஆனந்தரச நாடகம்

பெனுரிஸ் கிராமத்தில் தப்பிதமாக மாறுபட்ட இரு சோடி மணமக்களை ஒரு மணமகளுடைய ஒளி பொருந்திய கண்மூலம் திருபணஞ் செய்து அவளை அவளது சொந்தக்கணவன்வீட்டிற்கு அனுப்பினுர்கள்.

இரண்டு சோடி மணமக்கள் ஒரே இரதத்தில பிரயாணஞ்செய்தார்கள். ஒரு பகுதி நாமக்காரச் சாதியும், மறுபகுதி தாகூர் சாதியுமாவர். பிரயாண முடிவில், நாமக்காரச்சாதிப் பெண், தாகூர்வீட்டு மணமகனுடனும் தாகூர்வீட்டுப் பெண் நாமக்கார வீட்டு மணமகனுடனும் சென்று முறைப்படி வரவேற்கப்பட்டனர். ஆனுல் சிறிது நேரத்தால் தாகூர் வீட்டார் தம் மணமகளுக்கு ஊனக்கண் உண்டென்றும் இது வேறு மணமகள் என்றும் கண்டு அதனை நிரூபித்து நாமக்காரப் பெண்ணை அவளுடைய சொந்தக் கணவன் வீட்டிற்கு அனுப்பித் தம் மணமகளை நாமக்காரவீட்டினின்றும் அழைத்து மறுபடியும் முறைப்படி கிரியைகள் நிறைவேற்றினர்.

---

### சுகாதார நன்கொடை

பதினேழு லட்சம் ரூபா சுகாதார விருத்தித்துறையிற் செலவழிப்பதற்கு உலகசுகாதாரமகாநாட்டார் இலங்கைக்கு நன்கொடையாகக் கொடுக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

# விவாக விஞ்ஞாபனம்

## பத்மநாதன் — இராசலட்சுமி

நிகழும் வைகாசி மீ 23 உ (5—6—52) வியாழக்கிழமை இரவு 7 மணி வரையில் வரும் சுபமுகூர்த்தத்தில், எங்கள் மகன் திருவளர் செல்வன் பத்மநாதனுக்கும், கந்தர்மடம் திரு. செ. சுந்தரம்பிள்ளையவர்களின் புதல்வி திருவளர் செல்வி இராசலட்சுமி அம்மாளுக்கும் திருமணம் செய்து வைப்பதற்குத் திருவருளை முன்னிட்டுப் பெரியோர் நிச்சயித்திருப்பதால், அத்தருணம், வந்து, தம்பதிகளை ஆசிர்வதிக்கும்வண்ணம் சுற்றமித்திரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(அடுத்தநாள் வெள்ளிக்கிழமை பகல் 4 மணி தொடக்கம் மணமகன் இல்லத்தில் உபசரணை நடைபெறும்.)

வண்கிழக்கு,
245 நாவலர் வீதி.

சு. பொ. கந்தையா

# நாவலர் பெருந்தகை ஆற்றிய நற்பணி

## தெய்வத்தமிழ்ச் சீர்பரப்பியமை

உலகில்உள்ள மக்களிடையே பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. அவைகளுள் தலைசிறந்து விளங்குவது தமிழ். அத்தகைய இனிமை நிறைந்த தமிழின் பெருமையை "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்" என்று காலங்கடந்த பாரதியார் கூறியிருக்கின்றார். முருகப் பெருமானால் வளர்க்கப் பெற்று அகத்தியர் பெருமானால் காக்கப்பெற்று, சங்கப் புலவர்களால் போற்றப் பெற்று என்றும் அழியாது இறைமொழியாய் விளங்குவது தமிழ். இத்தகைய தமிழ் இருந்த இடமும் தெரியாமல் மறையுந் தன்மையதாயிற்று புத்துயிர்கொண்டு வீறுடன் தமிழைத் தலைநிமிரச் செய்த தொண்டு, நற்றமிழ்க் குரிசிலாகிய நமது நாவலர் பெருந்தகை அவர்களுக்கே உண்டு. நாவலர் அவர்கள பிறந்திராவிடில் தமிழ் மறைந்துவிடுவது நிச்சயம். எனவே தமிழைப் பாதுகாத்த நாவலரின் பணியைச் சிறிது ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமெனக!

பிரமஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர்
தெல்லி நகர்

நாவலர் காலத்துக்கு முன் முக்கியமாகத் தமிழ் நூல்களையாவும் செய்யுள் வடிவாகவேயிருந்தன. இதனை நாவலர் பெருமான் கண்டார்! அருகிப்போய் மறைந்துபோய் இலைமறை காய்போல் இருந்த எத்தனையோ சங்க நூல்களையும் சமய நூல்களையும் இன்னபிற நூல்களையும் பிழையில்லாது பரிசோதித்து அழகுற அச்சேற்றினர்.

தமிழ் வசனநடை எழுதுவதில் ஆறுமுக நாவலருக்கு நிகரானவர்கள் ஒருவரும் இல்லையென்று கூறின் அது மிகையாகாது.

அவரே மக்களுக்கு வசனநடை எழுதப் பயிற்றினர். இதனால் மக்கள் சுகமாகப் படிக்க முடிந்தது. இவைகளை நாம் ஆராய மிடத்து நாவலருக்கு முன் இருந்த மக்கள் தமிழைப் படிப்பதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்களென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

### சமயப் போர்வீரன்

சமயச் சண்டை காரணமாக நாவலர் பெருமான் தமிழுக்குச் செய்த பணி அளவிடற்கரிது. அவர் காலத்துக்குமுன் சைவக் கோயில்களில் புராணம் படிக்கும்போது தமிழில் விரிவுரை கூறுதலேயன்றிப் புறம்பான பொருளைப்பற்றித் தமிழில் விரிவுரை நிகழ்த்தும் வழக்கம் தமிழ் மக்களிடையே தமிழ்நாட்டிலே இருக்கவில்லை. கிறீஸ்த மக்களுக்குப் பாதிரிமார் செய்துவந்த ஆங்கில விரிவுரைகளைப்போல, சைவத்தின் உண்மைகளை மக்கள் அறிந்துகொள்ளுதற் பொருட்டும் கிறீஸ்த மதத்தைச் சைவர்கள் பின்பற்றுமல் இருப்பதற்கும், சைவத்தின் மேன்மைகளைப்பற்றியும், சைவாகமங்களைப்பற்றியும் கற்றோரும் கல்லாதோரும அறிந்து கொள்ளும் படியாக, முதன்முதலாக யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோயிலிலே விரிவுரை நிகழ்த்தத் தொடங்கினர். இதன பின் பலப்பல இடங்களிலும் விரிவுரைநிகழ்த்தினர். இவரது தமிழ்ப் பணியையும் நாவன்மையையும் கண்டு வியந்து திருவாவடுதுறை ஆதீனத்து மகா சந்நிதானம் அவர்கள் இவருக்கு "நாவலர்" எனனும் பட்டப் பெயரைச் சூட்டினர்கள.

### தமிழ்த் தவமணி

நாவலர் பெருமானின் தமிழை நன்கு கற்று, அதன் சுவையை அறிந்த யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் எவ்வாறுபுகழ்கின்றார் செந்தமிழ் உய்ய வந்தவர் என்கின்றார். தமிழ்ப்பணிதனை மணந்த தவமணிச் சைவன் என்கிறார். இவர் பாடிய பாடல்களை இனிச் சற்றுப் படித்து இன்புறுவோம்.

---

## Pandatheruppu Village Committee

பண்டத்தரிப்பு கிராமச்சங்கம்
Notice Callin for Tenders

### கிராமவேலை விளம்பரம்

பண்டத்தரிப்பு மாதகல் ரோட்டில் இருந்து சவண்மேன்று ஆசிப்பத்திரி ரோட்டுப்போட

1. மேற்படி வேலையைக் குத்தகையாக எடுத்துச்செய்ய விரும்புவோர் 1952 ஆ ஆனி மாதம் 7ந் திகதி பகல் 10 மணிக்கு முன் கிராமச்சங்கத் தலைவருக்கு மனுப்பண்ணல் வேண்டும்.

2. மனுப்பண்ண விரும்புவோர் 1952 ஆ ஆனி மாதம் 7ந் திகதிக்குமுன் மேற்படி சங்கக்கந்தோரில் ஒவ்வொரு விகித டாப்புப் பத்திரத்திற்கும் ரூபாய் ஐம்பது கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். சங்கத்தாற் கொடுக்கப்படும் விகித டாப்புப் பத்திரங்களிலேயே மனுச்செய்தல் வேண்டும்.

3. ஒப்பந்தம் எழுதிய பின்னரே விகித டாப்புப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

4. விகித டாப்புப் பத்திரங்கள் தெளிவாக மையினால் நிரப்பப்படல்வேண்டும். அழித்தல்கள் திருத்தங்கள் உள்ள இடங்களில் விண்ணப்பக்காரனின் கைச்சாத்திடப்படல்வேண்டும்.

5. விகித டாப்புப் பத்திரம் கடதாசிக்கூட்டில் போட்டுக் கிராமச் சங்கத் தலைவர் .......................... கிராமச்சங்கம் பண்டத்தரிப்பு என விலாசமிட்டு அனுப்புதல்வேண்டும், கடதாசிக்கூட்டில் இடதுபக்க மேல்மூலையில் மேற்படி வேலையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

6. மேற்படி வேலையைப் பற்றிய விபரங்களைக் கிராமச் சங்கக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்

7. குத்தகைகாரனும் நியமிக்கப்படுபவர் குறித்த வேலையைச் சரியாகவும் ஒழுங்காகவும் செய்வதற்குப் பிணையாய் கேள்வித்தொகையில் பத்திலொரு பங்குப்பணம் கட்டிய பின்னரே ஒப்பந்தம் எழுதப்படும். கிராமச்சங்கத் தலைவரால் குறிக்கப்பட்ட திகதிக்குள் ஒப்பந்தம் செய்யத் தவறின் குத்தகை மறுபேருக்குக் கொடுக்கப்படுவதோடு பிணைப் பணத்தில் ஒரு பகுதி அல்லது முழுவதும் விகித டாப்புப் பத்திரப் பணமும் பறிமுதலாக்கப்படும். அத்துடன் குற்றப்பட்ட குத்தகைகாரரின் இடாப்பில் அவர் பெயர் பதியப்படும்.

8. விகிதடாப்புப் பத்திரம்பெற்றோர் மனுப்பண்ணுமொழியின் விகித டாப்புப் பத்திரப் பணம் பறிமுதலாக்கப்படும்

9. குத்தகையில் குறைந்தகேள்வியை அல்லது எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளக் கிராமச் சங்கம் கடமைப்படுத்திக்கொள்ள மாட்டாது.

10. அரசாங்கத்திற்கு அல்லது ஸ்தலதாபனங்களுக்கு ஒப்பந்தமாய் வேலை செய்து பிழைப்பட்டவர்களின் மனுப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

11. கேள்விப்பத்திரங்கள் வடபகுதி உதவி ஸ்தலஸ்தாபன அதிபரால் தயாரிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட கொந்திறுத்துக்காரர்களுக்குமட்டுமே வழங்கப்படும்,

சு. நாகமுத்து
கிராமச்சங்கத்தலைவர்

கிராமச்சங்கக் கந்தோர்,
பண்டத்தரிப்பு,
திகதி 24-5-1952.
M. 34 30—5—52.

---

அரசியல் அலை

# ஆப்பு இழுத்த மர்க்கடமானுர் - - இடதுசாரிகள்

## செங்கட்டிக் கதை - - வினையாய் விளைந்ததா?

### இலங்கை மக்கள் நிரீச்சுர வாதிகளாகமாட்டார்

[நுணலும் தன் வாயாற் கெடும் என்பது முதுமொழி. புத்த விகாரைக்குரிய செங்கட்டிகளை மலகூடம் கட்டுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் இடங் கொடுத்தாரென்ற பாணத்தை Dr. N.M. பெரேரா ஊழ்வலியினலாக்கும் திரு டட்லி செனெனயக்கா மீது எய்தார். சரித்திரகால அம்புபோல அந்தப் பாணம் எய்தவர்மீதே சுழன்று பாய்ந்துவிட்டது.]

தன்வினை தன்னைச்சுடும் என்றது அரசியலிலும் பொருந்தும். 24-ம் 26-ம் திகதிகளில் நடந்த தேர்தலிலே ஒரு சமசமாஜக் கட்சி அங்கத்தவராவது மருந்துக்குத்தானும் வெற்றியடையாதது குறிப்பிடத் தக்கது. இதன் காரணம என்ன? பொது ஜனங்களுக்கு மதிமயக்கமில்லையென்பதே.

மதப்பற்றுள்ள இலங்கை மக்கள் பொதுவுடைமையை, ஒருபொழுதும ஆதரிக்கமாட்டார்கள் என்பது இடதுசாரிக் கட்சியுடன் கபட நட்பு கொண்ட பண்டாரநாயகக் கட்சியும் படுதோல்வியடைந்தமையிலிருந்து உண்மை வெளியாகின்றது. வடமாகாணத்திலும் கீழ்மாகாணத்திலும் இடதுசாரிக் கட்சியை விடமாகவே மக்கள் வெறுக்கின்றனர். திருக்கோண மலையிலும் பருத்தித்துறையிலும் இடதுசாரிகள் முறியடிக்கப்பட்டதும் யாழ்ப்பாணத் தொகுதியில் கொக்கரித்துவிட்டு இடதுசாரிகள் ஓடி யொழிந்தமையும் தமிழ்நாட்டில் இறை நெறியை மறக்கமாட்டார்களென்பதைக் காட்டுகின்றது.

# ஐ. தே. கட்சிக்குப் பேராதரவு

## மந்திரிகளில் நம்பிக்கைத் தீர்மானம்

### இரண்டாம் நாட் போர் முடிவு

தேர்தல் யுத்தத்தில் இரண்டாம் நாட்போரும் முடிந்துவிட்டது ஐக்கிய தேசீயக் கட்சியின் நிலைமை வெற்றிகாமாகவே இருக்கின்றது. இந்த இரண்டு தேர்தல்களிலும் இடதுசாரிகள் இருந்த இடம் அறியாது மறைந்தனர்.

#### வெற்றி விபரம்

**ஐக்கிய தேசியக் கட்சி**

வத்தேகம
திரு A. இரத்தினுயக

அகலவத்த
திரு. C. W. W. கன்னங்கரா

ஜஎல
திரு. முதலியார் ஜயசேகர

நீர்கொழும்பு
திரு. A. de. அபயசிங்க

நிக்கவேரட்டிய
திரு. K. கெறட்

அநுரதபுரம்
திரு. புலங்குலமசாவை

மதவாச்சி
திரு. M. சேனநாயக

வாரியப்பொல
திரு. J. T. தசநாயக

மினிப்பே
திரு. ரம்புக்வெலதிசாவை

டம்படெனிய
திரு. R. G. சேனநாயக

கொட்டக்கல
திரு U. B. உனம்பூவ

கொறனை
திரு. M. D. B. ஜயவர்த்தன

தெனியாய
திரு V. இரத்தினுயக

வெலிகம
திரு. M. ஜயவிக்கிரம

பலாங்கொட
திரு. A. F. மொலமுற,
,, E. W. மதியூ.

தலவாக்கெல
திரு. H. E. P. de. மெல்

பண்டாரவெல
திரு. K. V. D. சுகததாச

அப்புத்தளை
திரு. W. A. இரத்வத்த

நிவித்திக்கல.
திரு. W. B. வேரகம

டெடிகம
திரு. டட்லி சேனநாயக

நாத்தாண்டியா
திரு. A. பீரிஸ்

**சுதந்திரக் கட்சி**

கம்பகா
திரு. S. D. பண்டாரநாயக

**சமசமாஜக் கட்சி**

மொறட்டுவ
திரு. சோமவீர சந்திரசிரி
(நாவலங்கா ச.ச.கட்)

யாழ்ப்பாணம்
திரு. G. G. பொன்னம்பலம்
(த. கா)

ஊர்காவற்றுறை
திரு. A. L. தம்பியையா
(த. கா)

#### கட்சிகள் நிலைமை

| | |
|---|---|
| ஐ. தே. க. | 40 |
| சு. க. | 7 |
| த. கா. | 4 |
| தமிழரசு | 1 |
| நவலங்க. ச. ச. க. | 2 |
| சுயேச்சை | 8 |
| பொதுவுடமை | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00.

பிரதோஷவிரதமான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்தாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள்சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) டை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1·00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45·

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அஞ்சு 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna


## வித்தியா விருத்திப் பணம்

சென்ற வருடம் நடைபெற்ற மத்திய பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு வித்தியா விருத்திப் பணம் அளிப்பதற்கான பரீட்சையில் தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து தோற்றிய நான்கு மாணவரில் சுப்பையா சீலாயதாட்சி முருகேசு - அரியரத்தினம் என்னும் இருவரும் அப்பணம் பெறுதற் குரியவர்களாகத் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

## இந்தியருக்கு இலங்கையர் ஆற்றவேண்டிய கடமை

### 1-ம் பக்கத்தொடர்ச்சி

களைத் தருவோமென்றார்களா அல்லவா? ஆசைவார்த்தைகள் சொல்லி அழைத்தபொழுது இலங்கையில் உங்களுக்கு ஒரு காலத்தில் இடந் தரமாட்டோமென்று கூறினார்களா? தங்கள் வறுமை காரணமாகவே யெனினும் இங்குள்ளோர் சொற்களை நம்பியல்லவா வந்தார்கள். அவர்களுக்கு இந்தியாவிலும் இடமில்லை, இலங்கையிலும் இடமில்லை, இந்த நம்பிக்கைத் துரோகந்தானா சிவம் தரும் அன்பு? கிறிஸ்து காட்டிய அன்பு? புத்தர் கூறிய இரக்கம்? பதவி மோகத்தால் மதிமயங்கி நின்று கூறும் பதர் மொழிகளாலும் பயனுண்டாகுமா? இந்தப்பதவி மோகத்தர் இவ்வுலகிலே இறவாது வாழப் போகின்றார்களா? இலங்கை நாட்டை இறவாதிருந்து என்ஞான்றும் ஆளும்படி இவர்களுக்கு இறைவன் எழுதிக் கொடுத்துவிட்டாரா? என்னே மதியீனர், மதிகுன்றார் போன்று மக்களை மதிமயங்கச்செய்யும் மாபெரும் பாதகம்!

அன்பு நெறியில் ஒழுக விரும்புவோர் அஹிம்சையைத் தமக்கு அணிகலனாக வுடையோர் இந்த மாபாதகத்துக்குத் தக்க விமோசனஞ் செய்யக் காலந்தாழ்த்தாது முயல வேண்டும், இலங்கை இந்தியருக்கு நீதி வழங்கவேண்டும். இன்றேல் அறக்கடவுள்தரும் ஆபத்துக்களுக்கு நாம் ஆளாவது திண்ணம். அன்பு நெஞ்சுடையீர் அறநெறி காண்க.

"தினை விதைத்தவன்
தினை அறுப்பான்
வினை விதைத்தவன்
வினை அறுப்பான்."


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ரூனிமார்க்ஓடுகள் $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.

Std. 2



## யாழ்ப்பாணம ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=


தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



## "பத்திரானஸ்"

இதுவே அருந் தருணம்!



உங்கள் கண், பல் என்பனவற்றைச்
சோதிப்பிக்கத் தவறாதீர்கள்

சோதப்பித்துச் சிகிச்சை செய்தற்காகிய இந்தத் தருணத்தைத் தவற விடாதீர்கள். எங்கள் நீண்டகால அநுபவமும் சேவையும் உங்களைப் பூரண திருப்திப்படுத்தும் தற்கால சாஸ்திரீய உபகரணங்கள் எங்கள் வசம் இருக்கின்றன. மேலும் எங்களிடமுள்ள அழகிய புது மாதிரியான செயற்கைப் பல்வரிசைகள் நீடித்தகாலம் நின்று பிடிக்கக்கூடியன என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றோம்.

போன் இல. 271
(கிளைத்தாபனம்)
22, கண்டிறோட், குருநாகல்.
111, முதல் டிவிஷன், மருதானை.

"பத்திரானஸ்"
தந்த நயன வைத்தியசாலை
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்

PATHIRANAS
Dental Laboratory & Optical Works
28, Main Street, Jaffna



நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும நீரழிவு, பவுத்திரம, மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)

தோய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கேட்லாக் இனாம்)

M. 16. 25 4-52—25·10-52.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday May30 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org